# 6. மோட்டார் வாகன சட்டங்கள்

(MOTOR VEHICLES ACT 1939 AND 1988)

மோட்டார் வாகனச் சட்டம் 1939ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டது. வாகனங்களின் எண்ணிக்கை, தொழில் நுட்பம், சாலைகளின் அளவு, விபத்துக்களின் எண்ணிக்கை ஆகியவை பெருமளவு அதிகரித்திருப்பதால் அதற்கேற்ப வாகனச் சட்டங்களிலும் பல முக்கிய மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என தேசிய போக்குவரத்துக் கொள்கை வகுப்புக்குழு, சட்டக்குழு போன்ற பல குழுக்கள் அரசுக்குப் பரிந்துரைத்தன. நாடாளுமன்றத்திலும் பல நாடாளுமன்ற உறுப்பினர்களால் இப்பிரச்சினை எழுப்பப்பட்டது. இதன்விளைவாக 1984 பிப்ரவரியில் மோட்டார் வாகன சட்டத்தை (M.V.Act- 1939) மறு ஆய்வு செய்ய ஒரு பணிக்குழு அமைக்கப்பட்டது. அப்பணிக்குழுவின் பரிந்துரைக்கு ஏற்ப மோட்டார் வாகனச் சட்டத்தில் சில மாற்றங்கள் செய்யப்பட்டன; சில புதிய பிரிவுகள் சேர்க்கப்பட்டன. இம்மாற்றங்கள் (1988 மோட்டார் வாகனச் சட்டம்) 1988 முதல் நடைமுறைக்கு வந்தன. இதில் 1989இல் சில இணைப்புக்களும் சேர்க்கப்பட்டன.

## ஓட்டுநர் உரிமம் தொடர்பான சட்டங்கள்

ஓட்டுநர் உரிமம் தொடர்பான சட்டங்கள் குறித்த விவரங்கள் 'ஓட்டுநர் உரிமம் பெறுதல்' என்ற அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளன. ஓட்டுநர் உரிமம் தொடர்பான மேலும் சில மோட்டார் வாகனச் சட்டங்களையும், விதிமுறைகளையும் இனி பார்ப்போம்.

சம்பளத்திற்கு வாகனம் ஓட்டுபவர்கள் உரிமங்களில் அவ்வாறு ஓட்டுவதற்கு, குறிப்பாக உரிமம் வழங்கப்பட்டிருக்க வேண்டும். (SECTION 3 M.V. Act) சம்பளத்திற்கு வாகனம் ஓட்டுபவர்கள் உரிமம் பெறுவதற்கு முன்பும், உரிமம் புதுப்பிக்கப்படும் முன்பும் போக்குவரத்துச் சட்டங்களைப் பற்றி



Scanned by TapScanner

எழுத்தறிவைத் தேர்வு நடத்தப்பட வேண்டும்.

1939 ஆம் ஆண்டின் மோட்டார் வாகன சட்டத்தின் பிரிவு 3 ன்படி இந்தியாவின் எந்தப் பகுதியில் வழங்கப்பட்ட ஓட்டுநர் உரிமமாக இருந்தாலும், அது இந்தியா முழுவதும் செல்லுபடியாகும். ஆனால், இந்த விதி போக்குவரத்து வாகனம் ஓட்டப் பொருந்தாது.

**போக்குவரத்து வாகனங்களை ஓட்ட :**

1. சம்பளத்திற்கு வாகனம் ஓட்டுவதற்கு அனுமதி பெற்றிருக்கவேண்டும். **(Section 3, Motor Vehicle Act)**

2. முதலுதவிச் சான்றிதழ் பெற்று இருக்கவேண்டும். பர்மா, இலங்கை அகதிகளுக்கு முதலுதவிச் சான்றிதழ் பெறுவதிலிருந்து விதிவிலக்கு உண்டு. முன்னாள் இராணுவத்தினர் பணியாற்றுகையில் முதலுதவிப் பயிற்சி பெற்றதற்கான சான்றிதழ் அளித்தால் அவர்களுக்கும் விதிவிலக்கு அளிக்கப்படும்.

3. வில்லை ("பாட்ஜ்") பெற்றிருக்கவேண்டும்.

4. போக்குவரத்து வாகனங்களை ஓட்ட குறிப்பாக உரிமம் வழங்கப்பட்டிருக்க வேண்டும். **(Section 3, M.V. Act)**

மேற்குறிப்பிட்ட அனைத்தும் பெற்றிருந்தாலும் போக்குவரத்து வாகனங்களை ஓட்டுவதற்கு உரிமம் வழங்கப்பட்ட மாநிலத்தில் மட்டுமே ஓட்டலாம். தமிழ்நாடு, கேரளம், கர்நாடகம் ஆகிய மாநிலங்களில் ஏதேனும் ஒரு மாநிலத்தில் போக்குவரத்து வாகனங்களை ஓட்ட அனுமதி பெற்றிருந்தால் இதர இரு மாநிலங்களிலும் அது செல்லுபடியாகும். பிற மாநிலங்களில் போக்குவரத்து வாகனங்களை ஓட்ட அந்தந்த மாநிலங்களில் அனுமதி பெறவேண்டும்.

மேற்குறிப்பிட்ட அனைத்தையும் பெற்றிருந்தாலும் சென்னை போன்ற பெரு நகரில் டாக்சி, ஆட்டோ ரிக்க்ஷாக்கள் ஓட்டக்கூடாது. இவைகளை ஓட்ட தனி உரிமம் வழங்கப்படவேண்டும். இந்த நிபந்தனைகள் பம்பாய் போன்ற



Scanned by TapScanner

பெரிய நகரங்களிலும் நடைமுறையில் உள்ளது.

போக்குவரத்து வாகனங்களை ஓட்டுவதற்குரிய உரிமம் பெறுவதற்கு ஆங்கிலம், அல்லது தாய்மொழியில் எழுதவும் படிக்கவும் தெரிந்திருக்கவேண்டும். (T.M.V. Rule 5 (b) )

சம்பளத்திற்கு வாகனம் ஓட்டுபவரால் விபத்து ஏற்பட்டு யாரேனும் இறந்திருந்தால் அவருடைய கண் பார்வையும், வாகனம் ஓட்டும் திறனும் மீண்டும் பரிசீலிக்கப்படவேண்டும்.

உரிமம் காலாவதியான பின்பும் 30 நாட்கள் தொடர்ந்து அது அமுலில் இருப்பதாகக் கருதப்படும் (Section 10, M.V. Act)

நோய் அல்லது வாகனம் செலுத்த இயலாமை காரணமாக உரிமம் இரத்து செய்யப்படலாம். (Sec.12, M.V. Act) அடிக்கடி மோதல்களில் சம்பந்தப்பட்டாலும், அடிக்கடி குற்றம் செய்தாலும் வாகனத்தை கிரிமினல் குற்றத்திற்காகப் பயன்படுத்தினாலும் ஓட்டுநர் உரிமம் இரத்து செய்யப்படலாம் (Sec. 15, M.V. Act) உரிமங்களை தகுந்த காரணத்திற்காக இரத்து செய்ய வட்டார போக்குவரத்து அதிகாரிகளுக்கும் (R.T.O.s) நீதிமன்றங்களுக்கும் அதிகாரம் உண்டு.

குற்றங்களுக்கு வழங்கப்பட்ட தண்டனைகள் உரிமத்தில் பதிவு செய்யப்பட வேண்டும். பதிவு செய்யப்பட்ட தண்டனைகளைத் தெரிவிக்காமல், வேறு உரிமம் பெற்றுக் கொண்டால் அந்த உரிமம் செல்லுபடியாகாது. (Sec. 14 M.V.Act) பதிவு செய்யப்பட்ட தண்டனைகளை நீக்கிவிட்டு புதிய உரிமத்தை 3 ஆண்டுகளுக்குப் பிறகு பெற்றுக்கொள்ளலாம்; வேகக் கட்டுப்பாட்டை மீறிய குற்றமாக இருந்தால் ஒரு ஆண்டிற்குப் பிறகு தண்டனைகளை நீக்கிவிட்டு புதிய உரிமம் பெறலாம்.

கட்டியிழுத்துச் செல்லப்படும் வாகனத்தின் ஓட்டுநர் இருக்கையிலும் (TOW) உரிமம் பெற்ற ஓட்டுநர் இருக்கவேண்டும்.



Scanned by TapScanner

## மோட்டார் வாகனச் சட்டத்தின் பத்தாவது பகுதி (TENTH SCHEDULE M.V. Act 1988)

1. மோட்டார் வாகனத்தை ஓட்டுபவர் எவ்வளவு அளவு, இயலுமோ அந்தளவு இடப்புறமாகத் தனது வாகனத்தை ஓட்டி, எதிர்ப்புறம் வரும் வாகனங்கள் தனக்கு வலப்புறமாக வர இடமளிக்கவேண்டும்.

2. முன்னால் செல்லும் வாகனத்தை முந்திச் செல்ல வேண்டுமானால், வலப்புறமாகவே தாண்டிச் செல்லவேண்டும்.

3. முன்னால் செல்லும் வாகன ஓட்டி வலப்புறம் திரும்புவதாக சைகை காட்டினாலோ, டிராம் வண்டி போன்றவை வலப்புறம் சென்று கொண்டிருந்தால் போன்ற காரணங்களுக்காக மட்டுமே முன்னால் செல்லும் வாகனத்தை இடப்புறம் கடக்கலாம்.

4. முன்னால் செல்லும் வாகனத்தை முந்திச் செல்வதால் ஆபத்தோ அல்லது வசதிக் குறைவோ இருக்கும் என்ற நிலை இருந்தாலோ எதிரில் உள்ள பகுதி சாலை முனையாகவோ குன்று போன்றோ மேடாகவோ இருந்து, அதனால், எதிரில் வரும் வாகனங்களைக் காணவியலாத நிலையிருந்தாலோ முன்னால் செல்லும் வாகனத்தை முந்தி (கடந்து)ச் செல்லக்கூடாது.

5. பின்னால் வரும் வாகனம் உங்கள் வாகனத்தை முந்திச் செல்ல அல்லது தாண்டிச்செல்ல முயலும்போது வேகத்தை அதிகரித்தோ அல்லது வேறுவகையிலோ அந்த வாகனம் உங்களைக் கடந்து செல்வதைத் தடுக்காதீர்கள்.

6. கிளை சாலை, சாலை சந்திப்பு, சாலை முனைகள் ஆகியவற்றில் செல்லும்போது வேகத்தைக் குறைத்துச் செல்லவேண்டும்.

7. கிளை சாலையிலிருந்து பிரதான சாலையில் நுழையும்போது வாகனத்தை நிறுத்தி, பிரதான சாலையில் செல்லும்



Scanned by TapScanner

வாகனங்களுக்கு வழிவிட்ட பின்னரே செல்லவேண்டும். மேலும், கிளை சாலையிலிருந்து வேறு வாகனங்கள் வந்தால் வலப்புறமாக வரும் வாகனங்களுக்கு வழிவிட்ட பின்பே பிரதான சாலையில் நுழையவேண்டும்.

. ஊர்வலங்கள், அணிவகுப்புகள் சென்றுகொண்டிருந்தாலோ அல்லது சாலை பழுதுபார்க்கும் பணி நடந்து கொண்டிருந்தாலோ மணிக்கு 20 கிலோ மீட்டருக்கு மிகாத வேகத்திலேயே செல்லவேண்டும்.

. அ) இடதுபக்கம் திரும்பவேண்டுமானால் சாலையின் இடதுபுற விளிம்பினில் சென்று தொடர்ந்து (புதிதாகச் செல்லும் சாலையிலும்) இடதுபுறமாகவே செல்ல வேண்டும்.

ஆ) வலதுபுறமாக திரும்பவேண்டுமானால் முதலில் சாலையின் மத்தியில் சென்று, மெதுவாகத் திரும்பி, மிகுந்த கவனத்துடன் இருபுறமும் வாகனங்கள் வருகிறதா என்பதைக் கவனித்து மெதுவாகப் புதிதாக அடைந்த சாலையின் இடப்புறத்தை அடைந்து தொடர்ந்து செல்லவேண்டும். (பார்க்க: சாலை சந்திப்புக்களையும், வளைவுகளையும் கடக்கும் முறை) (IIவது பகுதி பார்க்க: வாகன ஓட்டிகள் காட்டவேண்டிய சைகைகள்).

## மேலும் சில விதிகள்:-

. பிறருக்கு ஆபத்தையோ, வசதி குறைவையோ ஏற்படுத்தும் நிலையில் வாகனங்களைச் சாலையில் நிறுத்தக்கூடாது *(பிரிவு-81)*.

!. இருக்கைகள் தவிர ஏனைய இடங்களில் யாரையும் ஏற்றிச்செல்லவோ அல்லது அனுமதிக்கவோ கூடாது *(பிரிவு-82)*.

!. வாகனம் ஓட்டுபவரைப் பாதிக்கும் வகையில் அல்லது வாகனத்தைக் கட்டுப்படுத்த இயலாதவகையில் அல்லது அதன் கட்டுப்பாட்டைப் பாதிக்கும்வகையில் யாரையும் வாகனத்தில் அமர்ந்துகொண்டோ, நின்றுகொண்டோ பயணம் செய்ய அனுமதிக்கக்கூடாது.



Scanned by TapScanner

4. ஸ்கூட்டர், மோட்டார் சைக்கிள் போன்ற இருசக்கர வாகனங்களை ஓட்டுபவர் ஒன்றுக்கு மேற்பட்டவர்களைத் தன்னுடன் அமர்ந்துவர அனுமதிக்கக்கூடாது. வாகன ஓட்டியுடன் அமர்ந்து வருபவர், வாகன ஓட்டிக்குப்பின்னால் சரியாகப் பொருத்தப்பட்ட இருக்கையிலேயே அமர்ந்துவரவேண்டும் *(பிரிவு-85).*

5. வாகனம் பழுதுபட்டிருந்தாலொழிய அல்லது ஓட்டுநர் தனது ஆசனத்தில் இருந்தாலொழிய சுமையேற்றிய வாகனங்களைப் பொது இடங்களில் நிறுத்தக்கூடாது. *(பிரிவு-84).*

6. ஓட்டுநர் இரத்தத்தில் *80 மி.கி/100 மி.லி.* போதைப் பொருள் இருந்தால் குடிபோதையில் வாகனம் ஓட்டியதாகக் கருதப்படும்.



Scanned by TapScanner

# 7. வாகனங்களுக்கான தகுதிச் சான்றிதழ் பெறுதலும் வாகனங்களைப் பதிவு செய்தலும்

வாகனங்களைப் பதிவு செய்வதும், அவற்றிற்கு தகுதிச் சான்றிதழ் பெறுவதும் சட்டப்படி கட்டாயமானதாகும். தகுதிச் சான்றிதழ் பெறாத அல்லது தகுதிச் சான்றிதழை புதுப்பிக்காத அல்லது தற்காலிக் அனுமதி பெறாத வாகனங்களை ஓட்டுவது குற்றமாகும்.

புதிய வாகனத்தைப் பதிவுசெய்ய கீழ்க்கண்ட அதிகாரிகளிடம் விண்ணப்பிக்க வேண்டும்.

அ) சென்னை போன்ற பெருநகரங்களில் வாகனத்திற்கு உரியவர் வசிக்கும் இடம் எந்த R.T.O. வின் ஆளுகைக்கு உட்பட்டதோ அவரிடமும்.

ஆ) மாவட்டங்களில் உள்ள வாகனங்களுக்கு அந்தந்த மண்டல போக்குவரத்து அதிகாரியிடமும் (R.T.O). விண்ணப்பிக்க வேண்டும்.

இ) மாநில போக்குவரத்துத் தொழிலுக்குச் சொந்தமான வாகனங்களுக்கு துணை போக்குவரத்து ஆணையாளர் (அரசுடைமையாக்கல்) பதிவு அதிகாரியாவார்.

வாகனங்கள் பெறப்பட்டதும் முதலில் தற்காலிகப் பதிவு பெறவேண்டும். தற்காலிக பதிவிற்கு அல்லது தற்காலிக பதிவு செல்லுபடி நீடிப்பதற்கு 'படிவம் 2' என்ற படிவத்தில் விண்ணப்பிக்கவேண்டும். இந்தப் படிவத்தில் தற்காலிகப் பதிவு அடையாளம், உரிமையாளரின் பெயர், தந்தை பெயர், முகவரி இவற்றுடன் வாகனத்தின் வகை, உற்பத்தியாளர் பெயர் உடலுறுப்பு வகை, இருக்கை கொள்ளளவு, நிறம் ஆகிய வாகனம் குறித்த விவரங்களும் குறிப்பிடவேண்டும். விண்ணப்பத்தில் 'தற்காலிகம்" எனத் தெளிவாகக் குறிப்பிடவேண்டும்.



Scanned by TapScanner

தற்காலிகப் பதிவு பெற்றதும் வாகனத்திற்குத் தகுதிச் சான்றிதழ் பெறவேண்டும். தகுதிவாய்ந்த ஆய்வாளர் வாகனம் தகுதியான நிலையில் இருக்கின்றதா? என்பதைச் சோதித்து தகுதிச் சான்றிதழ் வழங்குவார்.

101-சட்டத்தின் 38ஆவது பிரிவின் கீழ் பதிவு அதிகாரி, இயங்கூர்தி ஆய்வாளர், அல்லது உதவி இயக்கூர்தி ஆய்வாளர் தகுதிச் சான்றிதழ் வழங்கவும், புதுப்பிக்கவும் செய்யலாம். எந்த மாநிலத்தைச் சேர்ந்த தகுதி பெற்ற அதிகாரியால் வழங்கப்பட்ட தகுதிச் சான்றிதழானாலும் இந்த விதிப்படி கொடுக்கப்பட்ட தகுதிச் சான்றிதழுக்குச் சமமாகும்.

தகுதிச் சான்றிதழ் பெற அதற்கான படிவத்தில் விண்ணப்பிக்க வேண்டும்.

மத்திய மோட்டார் வாகன சட்டத்தின் 42 - ஆவது விதிப்படி முதலில் பெறும் சான்றிதழ் இரண்டாண்டுகளுக்குச் செல்லுபடியாகும், பிறகு ஆண்டுதோறும் சான்றிதழ் பெற வேண்டும். 10 ஆண்டுகளுக்குப் பிறகு 6 மாதங்களுக்கு ஒருமுறை இந்த சான்றிதழைப் பெறவேண்டும்.

தகுதிச் சான்றிதழ் பெற்று பிறகு நிரந்தர பதிவிற்கு விண்ணப்பிக்கவேண்டும். இந்த விண்ணப்பத்துடன் தகுதிச் சான்றிதழ், காப்பீட்டு (இன்சூரன்ஸ்) பத்திரம், தற்காலிக பதிவுச் சான்றிதழ் இவற்றை இணைத்து விண்ணப்பிக்கவேண்டும்.

தற்காலிக தகுதிச் சான்றிதழில் அது காலாவதியாகும் தேதி குறிப்பிடப்பட்டிருக்கும். அந்த தேதிக்குள் சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் தகுதிச் சான்றிதழைப் புதுப்பிக்க சோதனைக்கு வண்டியைக் கொண்டுசெல்லவேண்டும். தகுதிச் சான்றிதழ் வழங்கிய அதிகாரியோ அல்லது புதுப்பிக்கப்பட்ட சான்றிதழானால் கடைசியாக புதுப்பித்த அதிகாரியே வண்டியின் அடுத்த சோதனைக்கான தேதி, நேரம், இடம் இவைகளைச் சான்றிதழ்மேல் குறிக்கலாம். உரிமையாளர் அந்தக் குறிப்பின்படி சோதனைக்கு அந்த வண்டியைக் கொண்டு வரவேண்டும். ஆனால், உரிமையாளர் சான்றிதழை புதுப்பிக்க விரும்பாவிட்டாலும், அல்லது வாகனம் வேறு பதிவு அதிகாரி



Scanned by TapScanner

# 7. வாகனங்களுக்கான தகுதிச் சான்றிதழ் பெறுதலும் வாகனங்களைப் பதிவு செய்தலும்

வாகனங்களைப் பதிவு செய்வதும், அவற்றிற்கு தகுதிச் சான்றிதழ் பெறுவதும் சட்டப்படி கட்டாயமானதாகும். தகுதிச் சான்றிதழ் பெறாத அல்லது தகுதிச் சான்றிதழை புதுப்பிக்காத அல்லது தற்காலிக் அனுமதி பெறாத வாகனங்களை ஓட்டுவது குற்றமாகும்.

புதிய வாகனத்தைப் பதிவுசெய்ய கீழ்க்கண்ட அதிகாரிகளிடம் விண்ணப்பிக்க வேண்டும்.

அ) சென்னை போன்ற பெருநகரங்களில் வாகனத்திற்கு உரியவர் வசிக்கும் இடம் எந்த R.T.O. வின் ஆளுகைக்கு உட்பட்டதோ அவரிடமும்.

ஆ) மாவட்டங்களில் உள்ள வாகனங்களுக்கு அந்தந்த மண்டல போக்குவரத்து அதிகாரியிடமும் (R.T.O). விண்ணப்பிக்க வேண்டும்.

இ) மாநில போக்குவரத்துத் தொழிலுக்குச் சொந்தமான வாகனங்களுக்கு துணை போக்குவரத்து ஆணையாளர் (அரசுடைமையாக்கல்) பதிவு அதிகாரியாவார்.

வாகனங்கள் பெறப்பட்டதும் முதலில் தற்காலிகப் பதிவு பெறவேண்டும். தற்காலிக பதிவிற்கு அல்லது தற்காலிக பதிவு செல்லுபடி நீடிப்பதற்கு 'படிவம் 2' என்ற படிவத்தில் விண்ணப்பிக்கவேண்டும். இந்தப் படிவத்தில் தற்காலிகப் பதிவு அடையாளம், உரிமையாளரின் பெயர், தந்தை பெயர், முகவரி இவற்றுடன் வாகனத்தின் வகை, உற்பத்தியாளர் பெயர், உடலுறுப்பு வகை, இருக்கை கொள்ளளவு, நிறம் ஆகிய வாகனம் குறித்த விவரங்களும் குறிப்பிடவேண்டும். விண்ணப்பத்தில் 'தற்காலிகம்" எனத் தெளிவாகக் குறிப்பிடவேண்டும்.



Scanned by TapScanner

தற்காலிகப் பதிவு பெற்றதும் வாகனத்திற்குத் தகுதிச் சான்றிதழ் பெறவேண்டும். தகுதிவாய்ந்த ஆய்வாளர் வாகனம் தகுதியான நிலையில் இருக்கின்றதா? என்பதைச் சோதித்து தகுதிச் சான்றிதழ் வழங்குவார்.

101-சட்டத்தின் 38ஆவது பிரிவின் கீழ் பதிவு அதிகாரி, இயங்கூர்தி ஆய்வாளர், அல்லது உதவி இயக்கூர்தி ஆய்வாளர் தகுதிச் சான்றிதழ் வழங்கவும், புதுப்பிக்கவும் செய்யலாம். எந்த மாநிலத்தைச் சேர்ந்த தகுதி பெற்ற அதிகாரியால் வழங்கப்பட்ட தகுதிச் சான்றிதழானாலும் இந்த விதிப்படி கொடுக்கப்பட்ட தகுதிச் சான்றிதழுக்குச் சமமாகும்.

தகுதிச் சான்றிதழ் பெற அதற்கான படிவத்தில் விண்ணப்பிக்க வேண்டும்.

மத்திய மோட்டார் வாகன சட்டத்தின் 42 - ஆவது விதிப்படி முதலில் பெறும் சான்றிதழ் இரண்டாண்டுகளுக்குச் செல்லுபடியாகும், பிறகு ஆண்டுதோறும் சான்றிதழ் பெற வேண்டும். 10 ஆண்டுகளுக்குப் பிறகு 6 மாதங்களுக்கு ஒருமுறை இந்த சான்றிதழைப் பெறவேண்டும்.

தகுதிச் சான்றிதழ் பெற்று பிறகு நிரந்தர பதிவிற்கு விண்ணப்பிக்கவேண்டும். இந்த விண்ணப்பத்துடன் தகுதிச் சான்றிதழ், காப்பீட்டு (இன்சூரன்ஸ்) பத்திரம், தற்காலிக பதிவுச் சான்றிதழ் இவற்றை இணைத்து விண்ணப்பிக்கவேண்டும்.

தற்காலிக தகுதிச் சான்றிதழில் அது காலாவதியாகும் தேதி குறிப்பிடப்பட்டிருக்கும். அந்த தேதிக்குள் சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் தகுதிச் சான்றிதழைப் புதுப்பிக்க சோதனைக்கு வண்டியைக் கொண்டுசெல்லவேண்டும். தகுதிச் சான்றிதழ் வழங்கிய அதிகாரியோ அல்லது புதுப்பிக்கப்பட்ட சான்றிதழானால் கடைசியாக புதுப்பித்த அதிகாரியே வண்டியின் அடுத்த சோதனைக்கான தேதி, நேரம், இடம் இவைகளைச் சான்றிதழ்மேல் குறிக்கலாம். உரிமையாளர் அந்தக் குறிப்பின்படி சோதனைக்கு அந்த வண்டியைக் கொண்டு வரவேண்டும். ஆனால், உரிமையாளர் சான்றிதழை புதுப்பிக்க விரும்பாவிட்டாலும், அல்லது வாகனம் வேறு பதிவு அதிகாரி



Scanned by TapScanner

அல்லது இயக்கூர்திகள் ஆய்வாளர் அதிகார வரம்பிற்கு மாற்றப்பட்டு, அங்கு வைக்கப்பட்டிருந்தாலும், மேற்குறிப்பிட்டபடி வாகனத்தைக் கொண்டு வந்து காட்டவேண்டியதில்லை. இம்மாதிரி சந்தர்ப்பத்தில் உரிமையாளர் சோதனைக்காக குறிப்பிட்ட தேதிக்கு முன், குறிப்பு எழுதிய அதிகாரிக்கு, காரணத்தைக் குறிப்பிட்டு வண்டியைக் கொண்டு வந்து காட்டவில்லை என எழுத்துமூலமாகத் தெரிவிக்கவேண்டும்.

மேற்குறிப்பிட்டவாறு வாகனத்தைக் கொண்டு வந்து காண்பிக்க வேண்டிய தேதி குறிப்பிடாமலிருந்தால் உரிமையாளர் சான்றிதழின் காலாவதி தேதிக்கு ஒரு மாதத்திற்குக் குறையாத காலத்திற்கு முன் அதைப் புதுப்பிக்க விண்ணப்பமளித்து, தொடர்புடைய அதிகாரி, நியாயமான முன்னறிவிப்பு விடுத்து குறிப்பிட்ட தேதியிலும், நேரத்திலும், இடத்திலும் வாகனத்தைச் சோதனைக்குக் கொண்டு வந்து காட்ட ஏற்பாடு செய்யவேண்டும்.

105 - ஆவது விதிப்படி ஒரு வாகனத்திற்கு ஒன்றிற்கு மேற்பட்ட தகுதிச்சான்றிதழ் இருக்கக்கூடாது. இயந்திரக் கோளாறினாலோ அல்லது வேறு காரணத்தாலோ தகுதிச் சான்றிதழ் காலாவதியானபின், சான்றிதழ் புதுப்பிக்கவேண்டிய அதிகாரியின் ஆட்சி வரம்பிற்கு வெளியே ஒரு வாகனம் நின்று போயிருந்தால் எந்தப் பதிவு அதிகாரியும் அல்லது இயக்கூர்தி ஆய்வாளரும் உரிமையாளர் அல்லது ஓட்டுநர் உள்ளாகி இருக்கும் எந்தக் தண்டனையும் பாதிக்கப்படாமல், வண்டி ஓடுவதற்கு தகுதியாய் உள்ளதென அவர் கருதினால் த.சா.த. படிவத்தில் தான் குறிப்பிடும் நிபந்தனைக்கு உட்பட்டு, சான்றிதழ் புதுப்பிக்கவேண்டிய அதிகாரியின் ஆட்சி வரம்பிற்குள் வண்டி போய்ச் சேர்வதற்கு நியாயமாக அவசியமான காலத்திற்கு வண்டியை தொடர்ந்து ஓட அனுமதி அளிக்கலாம். இந்த அனுமதி குறிப்பின்படி குறிப்பிட்ட இடத்திற்கு வண்டியை ஓட்டிச்செல்லலாம். குறிப்பிட்ட இடம் போய்ச்சேர்ந்த பிறகு சான்றிதழைப் புதுப்பிக்கும்வரை வண்டியை ஓட்டக்கூடாது.

108 - ஆவது விதிப்படி ஆய்வு செய்யும் அதிகாரி வண்டி



Scanned by TapScanner

சாதாரணமாகப் பயன்படுத்துவதற்குள்ள பாதுகாப்புள்ளதாக இல்லை எனக் கருதினால், அவர் த.சா.கு. படிவத்தில் அதன் விவரத்தைக் காரணங்களுடன் பதிவு செய்து வண்டி உரிமையாளருக்கு, அவர் இல்லையெனில் ஓட்டுநருக்குத் தெரிவிக்கவேண்டும். சான்றிதழை வழங்கவேண்டிய அல்லது புதுப்பிக்கவேண்டிய அதிகாரிக்கு மனநிறைவான முறையில் குறைபாடுகளைச் சீர்படுத்தும்வரை, சீர்படுத்தியபின் ஆய்விற்கு ஓட்டிச்செல்வது தவிர பொது இடங்களில் வண்டியை ஓட்டக்கூடாது.

பாதுகாப்பில்லாததெனக் (பழுதுபட்டு) காணப்பட்டபோது ஒரு வண்டி பொது இடத்தில் இருந்தால், ஆய்வு அதிகாரி அதைப்படுத்துள்ள சேருமிடத்திற்கு அல்லது பழுது பார்க்க ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு அதை ஒரு மணிக்கு 16 கிலோ மீட்டருக்கு மேற்படாத வேகத்தில் ஓட்டிச்செல்ல அனுமதிக்கலாம். அந்த இடத்திற்குப் போனபின் பதிவு அதிகாரி அல்லது அந்த இடத்திற்குத் தொடர்புடைய இயக்கூர்திகள் ஆய்வாளர் அனுமதியின்றி எந்த பொது இடத்திற்கும் அந்த வண்டியை ஓட்டிச்செல்லக்கூடாது. பதிவு அதிகாரி அல்லது இயக்கூர்தி ஆய்வாளர்தான் பொருத்தமானதெனக் கருதும் நிபந்தனைக்குட்பட்டு அனுமதி வழங்கி, வண்டியை பொது இடங்களில் பயன்படுத்தும் முன் புதிய தகுதிச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளவேண்டும் எனக் கட்டளையிடலாம்.

## வாகன உரிமையாளர் மாறினால் :-

விற்றவரிடமிருந்து வாகனப் பதிவு புத்தகத்தின் பிரதியைப் பெறவேண்டும். இயன்ற வரையில் தொடர்புடைய அதிகாரிக்குத் தெரிவிக்கவேண்டும். 30 நாட்களுக்குப் பதிவை உங்கள் பெயரில் மாற்ற உரிய படிவத்தில் விண்ணப்பிக்கவேண்டும்.

## முகவரி மாறினால் :

வாகனத்தின் உரிமையாளரின் முகவரியில் ஏதேனும் மாற்றம் ஏற்பட்டால் முகவரி மாற்றத்திற்கான சான்றிதழுடன் 30 நாட்களுக்குள் தொடர்புடைய அதிகாரிக்குத் தெரிவிக்கவேண்டும்.



Scanned by TapScanner